**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**STC No. 290/2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Chithra | Prosecution | PW-2 Cross |
| Father/Husband | Balasubramaniyan | Defence | |
| Village | Thirumullai Vasal | Taluk | Sirkali |
| Calling | Sivan South street, Sirkali | Religion | |
| Age | 42-2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **27.06.2024** சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் புகார்தரரின் மனைவி என்றால் சரிதான். நான் வீட்டுகுடித்தனம் செய்து வருகிறேன். எனது கணவர் தற்போது திருமுல்லைவாசலில் அரிசி கடை வைத்து தொழில் செய்து வருகிறார் ஏற்கனவே சிங்கப்பூரில் இருந்தார். ஒருநாள் லாபம் ரூபாய் 500 வருமானம் இருக்கும் என்றால் சரிதான். தின வருமானம் 500 கூடுதலாகவும் ஒருசில நாள் குறைவாகவும் கிடைக்கும் என்றால் சரிதான்.அரிசி கடை தவிர வேறு தொழில் செய்யவில்லை என்றால் சரிதான் வீட்டு வாடகை வரும். கடை கணக்குகள் பராமரிக்கபடும் என்றால் சரிதான். அரிசி கடையிலும் வீட்டு வாடகையிலும் வரும் வருமானத்தை தவிர வேறு வருமானம் இல்லை. எனது கணவரின் வருமானத்தை தவிர வேறு வருமானம் எனது குடும்பத்திற்கு இல்லை என்றால் சரிதான். எனது கணவர் ரூபாய் 5 லட்சம் ராஜேஷ் என்பவருக்கு கொடுத்தார். கடன் உறுதி சீட்டை ராஜேஷ் என்பவர் எனது கணவருக்கு எழுதி கொடுத்தார். ராஜேஷ்ம் அவரது தந்தை உத்திரபதியும் சேர்ந்து கடன் உறுதி சீட்டு எழுதி கொடுத்தார்கள் என்றால் ராஜேஷ் மட்டும் தான் எழுதி கொடுத்தார். கடன் உறுதி சீட்டா அல்லது கை லட்டரா என்றால் பத்திரத்தில் கடனை எழுதி கொடுத்தார். நான் சொல்வது போல் கடன் பத்திரத்தை எனது கணவர் இந்த வழக்கில் தாக்கல் செய்து உள்ளாரா என்றால் நகல்லை தாக்கல் செய்து உள்ளார். எதிரியின் தந்தை உத்திரபதி மீது நான் ரூபாய் 5 லட்சத்திற்கு வழக்கு தாக்கல் செய்து இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு எந்த வருமானம் இல்லை என்ற போது எப்படி உத்திராபதிக்கு பணம் கொடுத்தேன் என்றால் எனது நகை இருந்தது அதன் மூலம் கொடுத்தேன். எதிரின் தந்தைக்கு பணம் கொடுக்க வேண்டி எனது நகையை அடமானம் வைத்து கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எனது நிருபண வாக்குமுலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு ரூபாய் 5 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனது கணவருக்க போதிய வருமானம் இல்லை என்றால் சரியல்ல அவர் வெளிநாட்டில் சம்பாதித்தை கொடுத்தார். எனது கணவர் வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை திருமுல்லைவாசல் இந்தியன் ஓவர்சிஸ் வங்கி சேமித்து வைத்து இருந்தார். வங்கி கணக்கை பார்த்தால் எதிரிக்கு கடன் கொடுத்த தொகை பற்றி தெரியும் என்றால் சரிதான். எனது கணவர் காசோலையாக கொடுத்தார் அல்லது வரைஓலையாக கொடுத்தார என்றால் கையில் பணம் ஆக தான் வங்கியில் எடுத்து கொடுத்தார். மேற்படி விவரத்தை நிருபணம் செய்ய வேண்டி வங்கி ஆவணத்தை நீதிமன்றத்தில் எனது கணவர் தாக்கல் செய்து உள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை. எனது கணவர் சீர்காழி காவல்

நிலையத்தில் ராஜேஷ் மற்றும் உத்திராபதி மீது பணத்தை கேட்டு திரும்ப தராததால் புகார் கொடுத்தார். மேற்படி புகார்ரை எனது கணவர் இந்த வழக்கில் தாக்கல் செய்து உள்ளாரா என்றால் அது பற்றி தெரியாது. காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததால் தான் காசோலை கொடுத்தார் என்றால் சரிதான். நானும் எனது கணவரும் வட்டி தொழில் செய்யவில்லை என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் வட்டி பற்றி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் அப்பா செங்கல் சேம்பர் வைத்து நடத்தி வந்தார்கள். எதிரியும் எனது கணவரும் குடும்ப நண்பர் என்று சொல்லி உள்ளேன் எவ்வாறு என்றால் நீண்ட நாட்கள் ஆக பேசி பழக்கம், சாதரணமாக பேசி பழக்கம் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 காசோலை ஆவணத்தில் anna bricks chamber என்று உள்ளது என்றால் சரிதான். எதிரியின் தந்தை நடத்தி வரும் chamber ன் பெயர் anna bricks chamber என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணம் காசோலையை anna bricks chamber ன் proprietor தான் கொடுத்து உள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் anna bricks chamber ன் ஒரு தரப்பினர் ஆக சேர்த்து உள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. anna bricks chamber ன் proprietor காசோலை வழக்கியதால் anna bricks chamber ன் தரப்பினர் ஆக சேர்த்து இருக்க வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி மயிலாடுதுறையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எதிரி மயிலாடுதுறையில் வசிப்பதால் எனக்கு எனது கணவருக்கும் தெரியாது என்றால் சரியல்ல. எதிரிக்கு வேலை கிடையாது என்றால் சரியல்ல chamber நடத்தி வருகிறார். தற்போதும் chamber நடத்தி வருகிறார் என்றால் சரிதான். எதிரி chamber நடத்தி வருவதற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கணவர் தாக்கல் செய்து உள்ள காசோலை மோசடி வழக்கிற்கு சாட்சி சொல்ல வந்தேன். எதிரிக்கு இந்த வழக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை எதிரியின் காசோலை இல்லை என்றாலும் அதில் உள்ள கையெழுத்து எதிரியின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கும் எனது கணவருக்கும் போதிய வருமானம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் பழிவாங்க வேண்டி எதிரியின் தந்தை கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி பொய்யாக வழக்கு தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரியல்ல. எதிரியின் தந்தைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டி எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்து உள்ளோம் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து கொள்ளபட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**